
**ஜூலை – 08**

# TNPSC துளிகள்

- ❖ இந்தியப் பிரதமருக்கு 'தி ஆர்டர் ஆஃப் தி ரிபப்ளிக் ஆஃப் டிரினிடாட் அண்ட் டொபாகோ' என்ற அந்த நாட்டின் மிக உயரியக் குடிமகன் விருதானது வழங்கப்பட்டு உள்ளது.
- ❖ இந்திய எஃகு ஆணையக் கழகமானது (SAIL), துபாயில் தனது முதல் வெளிநாட்டு அலுவலகத்தினை அதிகாரப்பூர்வமாகத் திறந்துள்ளது.
- ❖ மைக்ரோமேக்ஸ் மற்றும் ஃபிசன் ஆகியவற்றின் கூட்டு துணிகர முயற்சியான MiPhi செமிகண்டக்டர்ஸ் நிறுவனமானது, இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே நன்கு வடிவமைக்கப் பட்டு தற்போது தயாரிக்கப்பட்ட நிறுவன தரத்திலான ஒருங்கிணைந்த சுற்றமைப்பு கொண்டச் சேமிப்பகங்களை (Solid State Drives-SSD) அறிமுகப் படுத்தி உள்ளது.
- ❖ ஆப்கானிஸ்தானின் தாலிபான் அரசாங்கத்தினைச் சட்டப்பூர்வ அதிகார அமைப்பாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்த முதல் நாடாக ரஷ்யா மாறியுள்ளது.
- ❖ சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க முகமையின் (USAID) நிதியுதவி நிறுத்தப்பட்ட பின்னர், ஐதராபாத்தில் உள்ள திருநர்கள் முன்னெடுத்து நடத்தும் இந்தியாவின் முதல் சுகாதார மருத்துவமனை, டாடா அறக்கட்டளையின் புதிய நிதியுதவியுடன் சப்ராங் கிளினிக் என்ற பெயரில் மீண்டும் திறக்கப்பட்டது.
- ❖ தெலுங்கானா மாநில அரசானது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையுடன் (JICA) இணைந்து, செயற்கை நுண்ணறிவு (AI) கட்டமைப்பிற்கான தெலுங்கானாத் தரவுப் பரிமாற்றம் (TGDeX) எனப்படுகின்ற இந்தியாவின் முதலாவது அரசு தலைமையிலான எண்ணிமப் பொது உள்கட்டமைப்பினை (DPI) தொடங்க உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சுரங்கப் பகுதிகளுக்கான RECLAIM திட்டம்




- ❖ அரசாங்கமானது, RECLAIM (பாதிக்கப்பட்ட சுரங்கங்களைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல், சமூகங்கள், வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பது) கட்டமைப்பைத் தொடங்க உள்ளது.
- ❖ இது இந்திய நிலக்கரித் துறை அமைச்சகத்தின் கீழ் நிலக்கரி கட்டுப்பாட்டகம் மற்றும் ஹார்ட்ஃபுல்னெஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- ❖ நிலக்கரிச் சுரங்கங்கள் மூடப்பட்ட பிறகு, அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மற்றும் இயற்கை மீட்சியைப் பெற RECLAIM உதவும்.

- இது உள்ளூர் மக்களுடன் பணியாற்றுவதற்கான படிப்படியான ஒரு வழிகாட்டியை வழங்குகிறது.

# தேசியச் செய்திகள்

## இந்தியா-கானா இடையிலான புதிய கூட்டாண்மை

- 30 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு இந்தியப் பிரதமர் கானாவுக்குப் பயணம் மேற்கொண்டு அந்நாட்டு அதிபர் ஜான் மஹாமாவைச் சந்தித்தார்.
- இரு நாட்டுத் தலைவர்களும் இந்தியா-கானா இடையிலான உறவுகளை ஒரு விரிவான கூட்டாண்மையாக மேம்படுத்திட நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் அவர்கள் கையெழுத்திட்டனர்.
    - முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆனது கலை, இசை மற்றும் இலக்கியத்தில் கலாச்சாரப் பரிமாற்றத்திற்கானது.
    - இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தமானது இந்திய மற்றும் கானா தரநிலை அமைப்புகளை (BIS மற்றும் GSA) ஒருங்கிணைப்பது.
    - மூன்றாவது புரிந்துணர்வு ஒப்பந்தமானது பாரம்பரிய மருத்துவக் கல்வி மற்றும் பயிற்சியில் கவனம் செலுத்துவது.
    - நான்காவது புரிந்துணர்வு ஒப்பந்தமானது வழக்கமான விவாதங்களுக்கான கூட்டு ஆணையத்தை உருவாக்குவது.




## OBC சான்றிதழ் – உச்ச நீதிமன்றம்

- ஒரு குழந்தை தனது தாய் வழி உறவில் OBC (இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) சான்றிதழைப் பெற அனுமதிப்பது தொடர்பான வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரிக்க உள்ளது.
- தற்போதைய விதிகள் ஆனது தாய் வழி உறவுகள் மூலமாக அல்லாமல், தந்தை அல்லது தந்தைவழியான உறவின் மூலம் மட்டுமே OBC சான்றிதழைப் பெறுவதையே அங்கீகரிக்கின்றன.
- 2012 ஆம் ஆண்டு வழக்கு (இரமேஷ்பாய் தபாய் நாய்கா மற்றும் குஜராத் மாநில அரசு), கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளின் குழந்தைகள் மிகப் பொதுவாக தந்தையின் சாதியைப் பின்பற்றுவதாகக் கருதப் படுகிறது, ஆனால் வளர்ப்பின் அடிப்படையில்

இதை மாற்றலாம் என்று கூறுகிறது.

- 2019 ஆம் ஆண்டு டெல்லி உயர் நீதிமன்ற வழக்கில், SC (பட்டியலிடப்பட்ட சாதியினர் வகுப்பு) பிரிவினைச் சேர்ந்த ஒரு தாய்க்கு, அவர்களின் மகன்கள் பாகுபாட்டினை எதிர் கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிட்டு, அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் மறுக்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டில், டெல்லி உயர் நீதிமன்றமானது, ஒரு குழந்தை தாயின் சாதியைக் கோர சாதி அடிப்படையிலான பாகுபாட்டினை எதிர்கொள்வதற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும் என்று கூறியது.
- 2024 ஆம் ஆண்டில், கௌஹாத்தி உயர் நீதிமன்றமானது, சாதி அடையாளமானது வளர்ப்பு மற்றும் சமூகத்தின் யதார்த்த நிலையை அடிப்படையாகக் கொண்டது என்று கூறி, OBC பிரிவினைச் சேர்ந்த தாயால் வளர்க்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு அந்த OBC சான்றிதழை வழங்க அனுமதித்தது.
- தனியாளாக ஒரு தாயினால் மட்டுமே ஒரு குழந்தை வளர்க்கப்படுகின்ற சூழல்களில் சாதிச் சான்றிதழ்களுக்கான தேசிய விதிகள் குறித்து உச்ச நீதிமன்றம் தற்போது முடிவு செய்யலாம்.




## ஒருங்குறியக் கூட்டமைப்பு


- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) மூலம் இந்தியா ஒருங்குறியக் கூட்டமைப்பில் மீண்டும் இணைந்துள்ளது.
- அனைத்து எண்ணிமச் சாதனங்களிலும் பயன்படுத்தப்படும் உரை மற்றும் உணர்வு வெளிப்படுத்திக் குறியீடுகளுக்கான உலகளாவியத் தரநிலைகளை ஒருங்குறியக் கூட்டமைப்பு அமைக்கிறது.
- MeitY ஆனது ஒருங்குறியத் தொழில்நுட்பக் குழுவில் இந்தியாவிற்கு அரை வாக்குகளை வழங்கி தற்போது ஒரு துணை உறுப்பினராக உள்ளது.
- தமிழ் மெய்நிகர்ப் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து வாக்களிக்கும் அந்தஸ்தினைக் கொண்ட ஒரே தேசிய அரசாங்கம் இந்தியாவாகும்.
- இந்தியாவின் உறுப்பினர் அந்தஸ்திற்கான செலவினம் ஆண்டிற்கு 20,000 டாலர் (17 லட்சம் ரூபாய்) ஆகும்.
- இந்தியா முன்னதாக 2000 முதல் 2019 ஆம் ஆண்டு வரை அதன் உறுப்பினராக இருந்தது, மீண்டும் 2021 ஆம் ஆண்டில் சிறிது காலம் உறுப்பினராக இருந்தது.
- உலகளாவியத் தொழில்நுட்ப அமைப்புகளில் இந்தி மற்றும் தமிழ் போன்ற இந்திய

மொழிகளை அங்கீகரிக்க ஒருங்குறிய நுட்பம் உதவுகிறது.

- இந்தியாவின் ஈடுபாடானது இந்திய எழுத்துக்களை இயங்கலையில் ஊக்குவிக்கும் TDIL (இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்ப மேம்பாடு) என்ற முன்னெடுப்பின் ஒரு பகுதியாக உள்ளது.




## கிர்மித்தியா சமூகத்தின் மரபுக்கு கௌரவம்





- கிர்மித்திய சந்ததியினர் மற்றும் அவர்களின் வழித் தோன்றல்களின் தரவுத் தளத்தை உருவாக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- கிர்மித்தியர்கள் 1830 முதல் 1920 ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்திய தொழிலாளர்களாக இருந்தனர்.
- அவர்கள் கரீபியன், பிஜி, மொரிஷியஸ் மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

- டிரினிடாட் மற்றும் டொபாகோவில், பல குடும்பங்கள் ஒப்பந்த தொழிலாளர்களாக இருந்தனர்.
- இந்தப் புதிய திட்டமானது ஆறாவது தலைமுறை கிர்மித்திய சந்ததியினருக்கு கூட உதவுகிறது.
- இந்தியா அவர்களுக்கு வெளிநாடு வாழ் இந்தியர்கள் குடியுரிமை (OCI) அட்டைகளை வழங்க உள்ளது.
- 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ், 2005 ஆம் ஆண்டில் OCI அட்டைகள் வழங்கப் படத் தொடங்கின.
- இந்த தரவுத் தளமானது இந்தியாவுடனான பழையக் குடும்ப உறவுத் தொடர்புகளைச் சரி பார்க்க உதவும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பசுமை ஆற்றலைத் தூண்டக் கூடிய பொருள்




- மீமின்தேக்கிகளை மேம்படுத்துவதற்காக என இந்திய அறிவியலாளர்கள் லாந்தனம் சேர்க்கப் பட்ட வெள்ளி நியோபேட் எனும் கூறினை உருவாக்கியுள்ளனர்.
- மீமின்தேக்கிகள் ஆற்றலைச் சேமித்து விரைவாக வெளியிடும் சாதனங்கள் ஆகும்.
- லாந்தனம் என்பது மின்னியப் பண்புகளை மேம்படுத்தும் ஓர் அருமண் தனிமம் ஆகும்.
- லாந்தனத்துடன் இணைப்பது வெள்ளி நியோபேட் துகள்களைச் சுருக்கி, மேற்பரப்புப் பகுதியை அதிகரிக்கிறது.
- இது ஆற்றல் சேமிப்பு மற்றும் மின் கடத்துத்திறனை மேம்படுத்துகிறது.
- பல பயன்பாடுகளுக்குப் பிறகும் புதிய பொருள் ஆனது 118% ஆற்றல் திறனைத் தக்க வைத்துக் கொள்கிறது.
- இது கிட்டத்தட்ட எந்த ஆற்றல் இழப்பும் இல்லாமல் 100% கூலம்பிக் செயல்திறனை அடைகிறது.
- நிஜ உலகப் பயன்பாட்டை விளக்கி காட்டுவதற்கு ஒரு முன்மாதிரி மூலமாக LCD (திரவ படிக திரை) திரை இயக்கப்பட்டது.

## ஆரோக்கியமான வகையில் முதுமையடைதல் குறித்த புதிய ஆய்வு

- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (IISc) ஆனது, BHARAT என்ற பெரிய அளவிலான ஆய்வைத் தொடங்கியுள்ளது.

- BHARAT என்பது ஆரோக்கியமான முறையில் முதுமையடைதல், மீள்தன்மை, மிகவும் பாதகமானச் சூழல் மற்றும் சில மாற்றங்களின் உயிரியல் குறிப்பான்கள் என்பதைக் குறிக்கிறது.
- இது வயது முதிர்வு குறித்து ஆய்வு செய்வதற்கான இந்தியாவின் நீண்ட ஆயுள்காலம் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தியர்களில் வயது முதிர்வு நிலையைப் பாதிக்கும் உடல், மூலக்கூறு மற்றும் சுற்றுச் சூழல் அறிகுறிகளைக் கண்டறிவதே இதன் குறிக்கோள் ஆகும்.
- ஆராய்ச்சியாளர்கள் பாரத் அடித்தளம் எனப்படும் இந்தியாவின் மிக முதல் விரிவான வயது முதிர்வு குறித்த தரவுத்தளத்தை உருவாக்கி வருகின்றனர்.
- இந்த உயிரியல் குறிப்பான்கள் என்பது உடலில் உள்ள மரபணுக்கள், புரதங்கள் மற்றும் இரசாயனங்கள் போன்ற அளவிடக்கூடிய உயிரியல் குறிகளாகும்.
- இந்த ஆய்வானது பல இந்தியர்களை வைட்டமின் D, B12 அல்லது கொழுப்பு குறைபாடு உள்ளவர்கள் என்று குறிப்பிடும் மேற்கத்தியத் தரநிலைகளைச் சவால் செய்ய உதவும்.
- இந்தியர்களுக்கு ஏற்றவாறு நோய்களைக் கண்டறிதல், சிகிச்சை மற்றும் மருந்து வடிவமைப்பை மேம்படுத்தவும் இந்த தரவுத் தளம் உதவும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பேரிடர் எச்சரிக்கை பரிசோதனை

- இந்தியாவில் பேரிடர் எச்சரிக்கைகளை மேம்படுத்துவதற்காக தொலைத்தொடர்புத் துறை (DoT) மற்றும் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) ஆகியவை இணைந்து பணியாற்றுகின்றன.
- பேரிடர் செய்திகளை அனுப்புவதற்கு அவர்கள் SACHET எனப்படும் ஒருங்கிணைந்த எச்சரிக்கை அமைப்பைப் பயன்படுத்துகின்றனர்.
- சில அவசர காலங்களில் சில குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு இந்த SACHET எச்சரிக்கைகளை SMS ஆக அனுப்புகிறது.
- இந்த அமைப்பானது சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) பரிந்துரைத்த பொது எச்சரிக்கை நெறிமுறையை (CAP) பயன்படுத்துகிறது.
- எச்சரிக்கை வழங்கீடுகளை மேம்படுத்துவதற்கு, விரைவான செய்தி வழங்கலுக்காக கைபேசி வலையமைப்பு சார் ஒளிபரப்பு (CB) தொழில்நுட்பம் சோதிக்கப் படுகிறது.
- நிலநடுக்கங்கள் அல்லது சுனாமி போன்றப் பேரிடர் நிகழ்வுகளின் போது பாதிக்கப் பட்ட பகுதியில் உள்ள அனைத்து தொலைபேசிகளுக்கும் CB எச்சரிக்கை செய்திகளை

விரைவாக அனுப்புகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஊட்டச்சத்துக் கணக்கெடுப்பு அறிக்கை

| Intake of | per capita per day | | | | per consumer unit* per day | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022-23 | | 2023-24 | | 2022-23 | | 2023-24 | |
| | Rural | Urban | Rural | Urban | Rural | Urban | Rural | Urban |
| Calorie (Kcal) | 2233 | 2250 | 2212 | 2240 | 2407 | 2488 | 2383 | 2472 |
| Protein (gm) | 61.9 | 63.2 | 61.8 | 63.4 | 66.7 | 69.9 | 66.6 | 69.9 |
| Fat (gm) | 59.7 | 70.5 | 60.4 | 69.8 | 64.4 | 78.0 | 65.1 | 77.0 |

*Consumer unit is a unit used to measure the energy requirement of a group of persons of different sectors, gender and age-groups

- 2022-23 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளின் வீட்டு நுகர்வு செலவுக் கணக்கெடுப்பு (HCES) ஆனது இந்தியா முழுவதுமான உணவு உட்கொள்ளுதல் குறித்தத் தரவுகளைச் சேகரித்தது.
- கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் ஒரு நபருக்கு மற்றும் ஒரு நுகர்வோருக்கு சராசரி கலோரி, புரதம் மற்றும் கொழுப்பு உட்கொள்ளலை இந்த அறிக்கையானது காட்டுகிறது.
- கிராமப்புற இந்தியாவின் சராசரி தினசரி கலோரி உட்கொள்ளல் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 2233 கிலோகலோரியாகவும், 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 2212 கிலோ கலோரியாகவும் இருந்தது.
- நகர்ப்புற இந்தியாவின் சராசரி தினசரி கலோரி உட்கொள்ளல் 2022-23 ஆம் ஆண்டில்

2250 கிலோ கலோரியாகவும், 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 2240 கிலோ கலோரியாகவும் இருந்தது.

- 2022-23 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை கிராமப்புறங்களில் மிகக் குறைந்த நிலையில் இருந்த ஐந்து குழுக்களுக்கும், நகர்ப்புறங்களில் மிகக் குறைந்த நிலையில் உள்ள ஆறு குழுக்களுக்கும் கலோரி உட்கொள்ளல் அதிகரித்துள்ளது.
- இரண்டு ஆண்டுகளிலும் முக்கிய மாநிலங்களுக்கிடையில் கலோரி உட்கொள்ளலில் பெரிய வேறுபாடுகள் பதிவாகியுள்ளன.
- அதிக மாதாந்திர தனிநபர் நுகர்வு செலவினம் (MPCE) பதிவாகியுள்ளதால், கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்தியாவிலும் கலோரி உட்கொள்ளல் அதிகரிக்கிறது.
- கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஊட்டச்சத்து பெறல் குறித்து நன்கு புரிந்து கொள்ள உதவும் வகையில் தேசியப் புள்ளிவிவர அலுவலகம் (NSO) இந்த அறிக்கையை வெளியிட்டது.


## தனிமை நிலை குறித்த WHO அறிக்கை




- சமூக இணைப்புக்கான உலக சுகாதார அமைப்பின் ஆணையமானது, 'From loneliness to social connection: charting a path to healthier societies' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் (WHO) படி, 2014 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலகளவில் ஆறு பேரில் ஒருவர் தனிமை நிலையை எதிர்கொண்டனர்.
- தனிமை நிலையானது ஆண்டுதோறும் சுமார் 871,000, அதாவது ஒவ்வொரு மணி நேரத்திற்கும் சுமார் 100 உயிரிழப்புகளுக்கு காரணமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- இளையோர்கள் (13 முதல் 29 வயதுடையவர்) மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் உள்ளவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
- இருதய நோய், பக்கவாதம், மனச்சோர்வு, பதட்டம் மற்றும் முன் கூட்டிய மரணம் ஆகியவை இதனால் ஏற்படும் சுகாதார அபாயங்களில் அடங்கும்.
- ஆனால் சமூகத்துடன் இணைந்து இருத்தலானது நோய் அபாயத்தைக் குறைத்து, மன ஆரோக்கியத்தை மேம்படுத்தி, ஆயுட்காலத்தை அதிகரிக்கிறது.
- இது மோசமான உடல்நலம், குறைந்த வருமானம், தனியாக வாழ்வது மற்றும் அதிகப் படியான திரை நேரம் போன்றவற்றை ஏற்படுத்துகிறது.
- இந்த அறிக்கையானது கொள்கை மாற்றம், பொது விழிப்புணர்வு, சிறந்த தரவு மற்றும் சமூக வடிவமைப்பு ஆகியவற்றை உருவாக்க கோருகிறது.
- பாதுகாப்பானப் பொது இடங்கள் மற்றும் உள்ளூர் மகிழ்ச்சிகரச் செயல்பாடுகள் சமூக தனிமைப்படுத்தலைக் குறைக்க உதவும்.

## இரசாயனங்கள் குறித்து நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, "Chemical Industry: Powering India's Participation in Global Value Chains" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் வேதியியல் துறையானது பெரியது என்றாலும் உள்கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சவால்களுடன், ஆங்காங்கே குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே அமைந்து சிதறி உள்ளது.
- உலகளாவிய வேதியியல் மதிப்புச் சங்கிலிகளில் இந்தியா சுமார் 3.5% பங்கை மட்டுமே கொண்டுள்ளது.
- இறக்குமதியினைச் சார்ந்திருத்தல் காரணமாக 2023 ஆம் ஆண்டில் இந்தியா சுமார் 31 பில்லியன் அமெரிக்க டாலர் இரசாயன வர்த்தகப் பற்றாக்குறையை எதிர்கொண்டது.
- இந்தத் துறையை மேம்படுத்துவதற்காக வேண்டி நிதி மற்றும் நிதி சாராத பகுதிகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.
- சீர்திருத்தங்களுடன், 2040 ஆம் ஆண்டிற்குள் இந்தியா 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான வேதியியல் துறையினை கொண்டதாக மேம்பட முடியும்.
- 2040 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் (GVC) 12% பங்கைப் பெற்று இருப்பதையும், உலகளாவிய வேதியியல் உற்பத்தி ஆற்றல் கொண்ட ஒரு மையமாக மாறுவதையும் இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது.





# மாநிலச் செய்திகள்

## குஜராத்தைச் சேர்ந்த பங்குச் சந்தை முதலீட்டாளர்கள்

- இந்தியாவில் சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட பங்குச் சந்தை முதலீட்டாளர்களைக் கொண்ட மூன்றாவது மாநிலமாக குஜராத் மாறியுள்ளது.
- தேசியப் பங்குச் சந்தை (NSE) தரவுகளின்படி, குஜராத் ஒரு கோடி முதலீட்டாளர்களைக் கடந்து மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை அடங்கிய ஒரு பட்டியலில் இணைகிறது.
- இந்த மூன்று மாநிலங்களும் இந்தியாவின் மொத்த முதலீட்டாளர் தளத்தில் சுமார் 36% பங்கினைக் கொண்டுள்ளன.

- 2025 ஆம் ஆண்டு மே மாத நிலவரப்படி இந்தியாவில் சுமார் 11.5 கோடி பதிவு செய்யப் பட்ட முதலீட்டாளர்கள் உள்ளனர்.
- வட இந்தியாவானது 4.2 கோடி முதலீட்டாளர்களுடன் முன்னணியில் உள்ளது; மேற்கு இந்தியா 3.5 கோடி முதலீட்டாளர்களைக் கொண்டுள்ளது.
- தென்னிந்தியா 2.4 கோடி முதலீட்டாளர்களைக் கொண்டுள்ளது, கிழக்கு இந்தியா 1.4 கோடி முதலீட்டாளர்களைக் கொண்டுள்ளது.
- கடந்த ஆண்டை விட தென்னிந்தியா சுமார் 22 சதவீதமும், மேற்கு இந்தியாவானது 17 சதவீதமும் வளர்ச்சியடைந்துள்ளன.



TOP FIVE STATES

| Name | Registered Users (In lakh) |
|---|---|
| M'rashtra | 182 |
| **Gujarat** | **99** |
| UP | 70 |
| Karnataka | 51 |
| Tamil Nadu | 49 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★